9-30 a.m. **திரு. செ. மாதவன்** : இராமநாதபுரம் மாவட்டத்தில் சில குறிப்பிட்ட தாலூகாக்களில் மாத்திரம் இந்தத் திட்டம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. மற்ற தாலூகாக்களிலும் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் திட்டத்தின் கீழ் முதலில் மிகவும் பின்தங்கிய பகுதிகளான ராமநாதபுரம் தாலூகாவையும், முதுகுளத்தூர் தாலூகாவையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. இப்போது பரமக்குடி தாலூகாவையும் எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இலங்கையிலிருந்து வந்தவர்களுக்கு உடனடியாக வசதி செய்து கொடுக்கும் பொருட்டு அந்தத் தாலூகாக்களில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

Increase in prices of foodstuffs in City Hotels

* 223 *Q*.—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state the steps taken by the Government to arrest the sudden increase in price of the foodstuffs in hotels in Madras City?

The Hon. Sri V. RAMAIAH : The Government have examined the reasons for the increase in prices for edibles and meals in some hotels in the city and are satisfied that the extent of the increase is not out of proportion to the increase noticed in the prices of various foodgrains, vegetables, etc., considering the cost structure in the preparation of the dishes. The Government are, however, keeping a close watch over the situation so that no scope is given for profiteering by the hotel-keepers. They are also fully engaged in controlling the price level of the ingredients.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஹோட்டல்களில் உணவுப் பொருள்களில் விலை ஏறிக்கொண்டே போகிறதே தவிர, அளவுகள் எல்லாம் குறைந்து கொண்டே வருகின்றன. இட்டிலி, போண்டா, வடை போன்ற பொருள்களின் விலை ஏறுகின்ற நிலையில் உருவத்தில் குறைந்துகொண்டே போவதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது இருக்கும் நிலை ஸ்திரமானதாகத்தான் இருக்கிறது. சமீபத்தில் பெரும் அளவுக்கு அவற்றின் அளவு ஒன்றும் குறையவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : இட்டிலியின் உருவம் குறைந்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ள ஒரு நாள் அமைச்சர் அவர்கள் பரிசோதனை செய்வதற்காக ஹோட்டலில் போய் சாப்பிட முன் வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் சாப்பிட்டு முடிவுக்கு வர வேண்டியதில்லை. கனம் அங்கத்தினர்கள் சாப்பிட்டு குறைபாடுகளைப்பற்றி எழுதினால் கவனிக்கிறேன்.

11th August 1965]

திரு. எஸ். ஜே. ராமசாமி : தற்போது ஹோட்டல்களுக்குக் கண்ட்ரோல் விலையில் சர்க்கரை, அரிசி, பருப்பு முதலியவை சர்க்கார் மூலமாகவே சப்ளை செய்யப்படுகிறது. அப்படி இருந்தும் அவர்கள் ஏன் விலையை ஏற்றுகிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : முன்பு அரிசி, கோதுமை போன்ற பொருள்களை அரசாங்கம் கொடுக்காத காரணத்தால் விலையை ஏற்ற வேண்டியதாயிற்று என்றார்கள். இப்போது விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்று முயற்சி எடுத்தபோது பருப்பு வகைய ராக்களின் விலை ஏறிவிட்டது என்று கூறுகிறார்கள். இந்தப் பிரச்னையிலே தொடர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், ரெவின்யூ போர்டும் பரிசீலனை செய்து என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அவற்றை எடுத்து வருகிறார்கள்.

வடாற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் நெல் கொள்முதல்

*224 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ல் நவம்பர், டிசம்பர் ஆகிய இரு மாதங்களில் வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய இரு மாவட்டங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் ரகங்கள் யாவை ?

(இ) எவ்வளவு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டன ?

(உ) (i) கோவாப்பரேட்டிவ் சொசைடி மூலம் எவ்வளவு;

(ii) சர்க்கார் கொள்முதல் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (a) to (c) A paper [a] is placed on the Table of the House.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த அறிக்கையில் வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து 13,674.2 டன் கொள்முதல் செய்திருப்பதாகவும், செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து 10,568 டன் கொள்முதல் செய்திருப்பதாகவும் காணப்படுகிறது. நான் ஒரு யோசனையைச் சர்க்காருக்குச் சொல்ல விரும்புகிறேன். சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு மண்டலமாக ஆக்க முன் வருவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது இருக்கும் அமைப்பில் ஒன்றும் மாறுதல் செய்வதற்கில்லை. செங்கற்பட்டு, வட ஆற்காடு ஆகிய இரண்டு இடங்களிலும் ஒரே நேரத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வாங்க முடியாது. மூன்று காலங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்போது நாம் விவசாயிகள் கொடுக்கிற உபரி நெல்லைத் தான் வாங்குகிறோம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, millers have been appointed to procure paddy and they convert it into rice and supply. In such cases where they procure coarse variety, they are

[a] Printed as Appendix IV on pages 776-778.